(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 3]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, ஜூன் 09, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0001/ '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1 )

(அ) அரச தொழில் முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பர்ணாந்துபுள்ளே, கௌரவ ரோஹித போகொல்லாகம அவர்களாலும் மற்றும் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் 2007, சனவரி 12 இல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்னே அவர்களினால் 2006, யூலை 20 ஆம் திகதி மற்றும் பகிரங்க தொழில் முயற்சிகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹக்கீம் அவர்களால் 2007, நவெம்பா 29 ஆம் திகதிய PS 12 இலக்கம் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்,

(ii) மேலேயுள்ளதற்கு அமைய விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களையும்,

(iii) குழு அறிக்கையின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0076 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) ஹோமாகம, சியம்பலாகொட ஒளுபட்டாவ குளம், 16 ஏக்கர் அளவிளான ஒரு தனியார் குளமாக இருந்த போது கமநல அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி 1968 ஆம் ஆண்டில் அக்காலத்தின் கொழும்பு மாவட்டச் செயலாரினால் மேற்கொள்ளப்பட்ட அளவைக் கட்டளைக்கமைய பொறுப் பேற்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மு.பி.கொ. 880 திட்டவரைப்படத்தின் படி , பொறுப்பேற்கப்பட்ட பகுதி 12 ஏக்கர் .00 ரூட்ஸ் 38.6 பர்ச்சஸ் ஆக வரைப்படத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள தென்பதையும்,

(ii) பொறுப்பேற்கப்படாத 4 ஏக்கரில் வீடமைப்பதற்கோ அல்லது வேறு அபிவிருத்தியை மேற்கொள்வதற்கோ இடமளித்தால் அது குளத்தின் இன்றைய நிலைமையை மாற்றி குளம் மாசடைவதற்கான தாக்கத்தை ஏற்படுத்துமென கமநல அமைப்புகளால் பல தடவை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் தெரிவிக்கப்பட்டிருப்பதையும்,

(iii) குளமொன்றுக்கு பாதுகாப்பு பிரதேசம் அவசியமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) அதன் பிரகாரம், குளத்தின் பாதுகாப்புப் பிரதேசத்தை பாதுகாப்பதற்காக அவர் எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0091/ '09

3.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண – கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கமத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்த தலாவ, மல்வானேகம விவசாயப்பண்ணை தனியார் கம்பனியொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில் எந்த அடிப்படையில், எந்த நிறுவனத்திற்கு அல்லது எந்த நபருக்கு மேற்படி பண்ணை வழங்கப்பட்டுள்ளதென்பதையும் ,

(ii) மேற்படி பண்ணையை குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வழங்கிய போது இருந்த ஒரு வருடத்துக்கான குத்தகை எவ்வளவென்பதையும் ,

(iii) குத்தகைக்கு விடப்பட்ட திகதியிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை பெறப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும் ,

(iv) நிலையான தொகையொன்று பெறப்பட்டிருப்பின் அது எவ்வள வென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி பண்ணையை குத்தகைக்கு இடும் போது பண்ணைக்குச் சொந்தமாக இருந்த அசையா மற்றும் அசையும் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி சொத்து எத்தகைய காரியத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட தென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) (i) மேற்படி பண்ணை எத்தகைய நோக்கத்துக்காக எப்போது தாபிக்கப்பட்ட தென்பதையும்,

(ii) தற்போதைய நிருவாகத்தால் மேற்படி பண்ணை குறிப்பிட்ட நோக்கத்துக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுசாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0131 / '09

4.

கௌரவ விஜித ரணவீர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வீதிப் பராமரிப்பு நிதியம் எப்போது தாபிக்கப்பட்டது,

(ii) அதன் சட்ட அடிப்படை யாது,

(iii) இந்நிதியம் முகாமை செய்யப்படும் முறை யாது,

(iv) இந்நிதியத்துக்கு நிதி பெற்றுக்கொள்ளப்படும் முறைமை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெற்றோல் லீற்றரினாலும் டீசல் லீற்றரினாலும் வீதிப் பராமரிப்பு நிதியத்துக்கு வைப்பீடு செய்வதற்கு உடன்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு,

(ii) அதன் பிரகாரம் இந்நிதியத்தில் வைப்பீடு செய்வதற்கு 2006, 2007, 2008 ஆம் வருடங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் வெவ்வேறாக எவ்வளவு,

(iii) வீதிப்பராமரிப்புக்காக மேற்குறிப்பிட்ட வருடங்களில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக வருட அடிப்படையில் எவ்வளவு,

(iv) வீதிப்பராமரிப்பு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிட்ட வருடங்களில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்ட முழுத்தொகை வருட அடிப்படையில் வெ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0180 / '09

5.

கௌரவ பேமசிறி மானகே,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) உலக சந்தையில் மசகெண்ணெய் பெரலொன்றுக்கான விலை வீழ்ச்சியடைந்து வருகின்றதாவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) உலகசந்தையில் மசகெண்ணெய் பெரலொன்றுக்கான நடப்பு விலை யாது,

(ii) வெளிநாட்டுக் கப்பல்களுக்கும் வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்களுக்கும் டீசல் விற்பனை செய்யப்படும் விலை யாது,

(iii) இந்நாட்டு மீன்பிடித் தொழிலாளர்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் வழங்கப்படுகின்ற விலை யாது

ஆகிய விபரங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0002 / '09

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா புத்திர வங்கி கூட்டிணைக்கப்பட்டது எப்போது என்பதையும் அதன் மூலதனத்தினையும்,

(ii) இது வங்கியற்ற நிறுவனங்களினால் முதலிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறாயின் சாதாரண பங்குகள், விருப்பத்தெரிவுப் பங்குகள், கடனீட்டுப் பத்திரம் ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iv) ஆரம்பத்திலிருந்து இற்றைவரையிலான கணக்குகளையும்,

(v) அங்கு தற்போது பணிபுரியும் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பெயர் களையும்,

(vi) அங்கு பணிபுரியும் 5 அதிஉயர் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பெயர்கள், அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளம் மற்றும் இதர நன்மைகள் ஆகியவற்றுடனும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தையும்,

(ii) வழங்கப்படும் கடனின் நூற்று வீதத்தை வட்டி வீதங்களுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0077 / ’09

7.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— கலாச்சார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை எப்போது திறக்கப்பட்டது என்பதையும்,

(ii) அதனை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திறக்கப்பட்டதன் பின்னர் அதன் மின்சாரம் துண்டிக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பின் நூதனசாலை மூடப்பட்ட திகதிகள் எவை என்பதையும்,

(iii) மின்சாரக் கட்டணம் உரியவாறு செலுத்தப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0092 / ’09

8.

கௌரவ ஆர். பி. ஏ ரணவீர பதிரண,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம், தலாவ ஊடாக கெகிராவ வீதியில் தலாவ நகரத்திலிருந்து எப்பாவல நோக்கி புணரமைப்பு செய்யப்பட்ட வீதியின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதையும்,

(ii) மேற்படி புணரமைப்பு நடவடிக்கைகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி புணரமைப்பு நடவடிக்கைக்கு கிடைத்த கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி கேள்விப்பத்திரம் எந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியின் புணரமைப்பு நடவடிக்கையின் போது திருத்தப் பட்ட மதகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அதற்கான மதிப்பீட்டுத் தொகை யாதென்பதையும்,

(iii) மேற்படி வீதி புணரமைப்பின் போது ABC யை பயன்படுத்தி புணரமைப்பு செய்யவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதியின் நீளம் எவ்வளவென்பதையும்,

(iv) மதிப்பீடு செய்யப்பட்ட தூரத்தில் எவ்வளவு தூரம் மேற்படி முறையில் புணரமைக்கப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பாதை உரிய முறையில் புணரமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) உரிய முறையில் புணரமைக்கப்படவில்லையாயின், மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(உ) புணரமைக்கப்பட்ட மேற்படி பாதையின் சில பகுதிகள் குன்றும் குழியுமாகியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல்,ஏன்?

0132 / '09

9.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு குடிநீர் வழங்குகின்ற மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார பிரதேசத்திற்குற்பட்ட சூரியவெவ வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் நீர்த்தேக்கத்தில் இடப்படுகின்ற கழிவுப்பொருட்களின் காரணமாக குடிநீர் பெறும் நீர்த்தேக்கம் அசுத்தாகமாகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப் பாளர்களின் பெயர் , முகவரி , குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் அனுமதியின்றி அங்கு குடியிருந்த காலப்பகுதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரியதாக வெவ்வேறாக யாவை என்பதையும்,

(ii) வீரவில விமான நிலையத்தை நிர்மாணிக்கும்போது காணிகளை இழக்கின்றவர்களுக்காக வழங்கப்படவிருந்த மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணித்துண்டுகள் உரிய விமான நிலையம் அங்கு நிர்மாணிகப்படாததால் வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்,

(iii) இன்றேல், இவர்களுக்கு பாசனக்காணிகளும் மேட்டுக்காணிகளும் வழங்கப்படும் இடம் மற்றும் உரிய பாசனக்காணிகளினதும் மேட்டுக்காணி களினதும் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) நீண்டகாலமாக அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களை அவர்கள் அகற்றப்படும் போது இழக்க நேரிடுவதால், வர்த்தக பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0181/'09

10.

கௌரவ பேமசிறி மானகே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தொழிற்சாலையில் சீமெந்து மூடை ஒன்று என்ன விலைக்கு வழங்கப்படுகின்றது என்பதையும்,

(ii) ஒவ்வொரு தொழிற்சாலையிலும் நாளொன்றுக்கு வினியோகிக்கப்படும் சீமெந்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) அது சந்தைக்குப் போதுமானதாக உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) எமது நாட்டின் சீமெந்து உற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாது என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0003 /'09

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் தொழிற்பாட்டில் உள்ள தொலைக்காட்சி நிலையங்களின் எண்ணிக் கையையும்,

(ii) உரிமங்கள் வழங்கப்பட்டிருப்பினும் தொழிற்பாடு ஆரம்பிக்கப்படாதிருக்கும் தொலைக்காட்சி நிலையங்களுக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக் கையையும்,

(iii) அவர்களது ஒளிபரப்பின் அலைவரிசையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) உள்ளூர் திரைப்படக் கைத்தொழிலுக்கு உதவும் நோக்கத்துடன் வெளிநாட்டுத் தொலைக்காட்சித் திரைப்படங்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதை அதைரியப்படுத்துவதற்காக அரசாங்கம் வரிகளை அறிமுகம் செய்ததை அவர் அறிவாரா?

(இ) (i) அது தனது குறிக்கோளை அடைந்து விட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், எங்கே, எவ்வாறு இப்பயன்கள் அடையப்பெற்றன என்பதையும்,

(iii) வரிகள் விதிக்கப்பட்டது முதல் இற்றைவரை ஒவ்வொரு நிலையத்தினாலும் செலுத்தப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஈ) (i) இந்தத் தொலைக்காட்சி நிலையங்கள் மீது விதிக்கப்பட்ட ஏனைய வரிகளையும்,

(ii) கடந்த 12 மாதங்களில் அரசாங்கத்தினால் சம்பாதிக்கப்பட்ட தொகையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0078 / '09

12.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டாவ நகரில் புதிதாக வீதி சமிஞ்ஞை தொகுதி எப்போது பொருத்தப்பட்டது என்பதையும்,

(ii) இந்த சமிஞ்ஞை தொகுதி முறையாக இயங்காமல் மஞ்சல் நிற குமிழ் மாத்திரம் எரிவதற்கான காரணம் என்ன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த வீதி சமிஞ்ஞை தொகுதியை செயற்படச் செய்வதற்கு செலவிடப்பட்ட மொத்த தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அதனை நிர்மாணித்த நிறுவனம் எது என்பதையும்,

(iii) முழுக்கொடுப்பனவும் செலுத்தப்பட்டு விட்டதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0093/'09

13.

கௌரவ ஆர். பீ. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கெக்கிராவ, இப்பலோகம ரணவிரு கிராமத்தின் நிர்மாணப்பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு எவ்வளவென்பதையும்,

(ii) இந்த நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(iii) வீடொன்றை நிர்மாணிப்பதற்காக செலவிட எதிர்பார்க்கப்படுகின்ற தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இக் கிராமத்திற்கான பிரதான நுழைவுப்பாதையை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(v) செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச் சபைக்குக் கூறுவாரா?

(இ) (i) இக் கிராமத்திற்கான குறுக்கு வீதிகளையும், கால்வாய்த் தொகுதியையும் நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்படும் நிலப்பரப்பின் அளவு எவ்வளவென் பதையும்,

(ii) முழுமையான அளவில் வீடுகளையும், கால்வாய்த் தொகுதியையும் நிர்மாணிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு எவ்வள வென்பதையும்,

(iii) இக் கிராமத்திற்கான முழு நிலப்பரப்பில் எவ்வளவு திறந்த நிலையில் உள்ளதென்பதையும்,

(iv) இந்த வீடுகள் எந்த அடிப்படையில் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படுமென்பதையும்,

(v) ஒரு வீட்டுக்காக எவ்வளவு தொகை அறவிட எதிர்பார்க்கப் படுகின்றதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0133 /'09

14.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) திஸ்ஸமகாராம பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0183 / '09

15.

கௌரவ பேமசிறி மானகே,— கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) புல்மோட்டை பிரதேசத்தில் கனியமணல் படிமமொன்று அமைந்திருக்கின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அக்கனிய மணல் படிமத்தில் உள்ள கனிய வகை யாது,

(ii) அக்கனிய படிமம் தொடர்பாக வெளிநாட்டுக் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா,

(iii) ஆமெனில், எப்பொழுது,

(iv) அதற்காக சம்பந்தப்பட்ட அங்கீகாரம் கிடைத்துள்ளதா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற் குறிப்பிட்ட உடன்படிக்கையில் ஒப்பமிட எதிர்பார்த்துள்ள கம்பனியின் பெயர், முகவரி யாது,

(ii) அக்கம்பனியுடன் தற்பொழுது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி,— ஆயுதந்தாங்கிய படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையேயான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாகவிருக்க வேண்டியவரும்; பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியாகவிருக்க வேண்டியவருமான ஆளொருவரை நியமிப்பதற்கும் பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியினது குழுவைத் தாபிப்பதற்கும்; ஏற்பாடு செய்வதற்கும்; பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரியின் பணிகளுக்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சர்,— ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்),— 1975 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சர்,— இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்),— (132 ஆம் அத்தியாயமான) இந்தியக் குடிவரவு தொழிலாளர் கட்டளைச் சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்(இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

5.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.2),— 30 ஆம் இலக்க நிலையியற் கட்டளையிலுள்ள "அரைமணித்தியாலத்திற்குமேல்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஒருமணித்தியாலத்திற்குமேல்" எனும் சொற்றொடரை இடுவதன் மூலம் இந் நிலையியற் கட்டளை நிகழும் கூட்டத்தொடரின் போது தொழிற்படுமாக.

6.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

7.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— ஆலோசனைக்குழுக்களும் (சட்டவாக்க) நிலையியற் குழுக்களும்,—

(அ) கீழ்க்கண்டவாறு ஐம்பத்து ஐந்து (55) ஆலோசனைக்குழுக்கள் நியமிக்கப் படுமாக:-

1. மத அலுவல்கள், ஒழுக்க மேம்பாடு பற்றிய ஆலோசனைக்குழு.
2. பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய ஆலோசனைக்குழு.
3. நிதி, திட்டமிடல் பற்றிய ஆலோசனைக்குழு.
4. தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
5. உள்ளக நிருவாகம் பற்றிய ஆலோசனைக்குழு.
6. பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய ஆலோசனைக்குழு.
7. நீதி, சட்டமறுசீரமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
8. சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக்குழு.
9. துறைமுகங்கள், விமான சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
10. பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
11. நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
12. கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
13. கல்வி பற்றிய ஆலோசனைக்குழு.
14. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
15. இளைஞர் வலுவூட்டுகை, சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
16. தபால், தொலைத்தொடர்புகள் பற்றிய ஆலோசனைக்குழு.
17. நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
18. சமூக சேவைகள், சமூக நலனோம்புகை பற்றிய ஆலோசனைக்குழு.
19. வீடமைப்பு, பொதுவசதிகள் பற்றிய ஆலோசனைக்குழு.

20. சமூக அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
21. நீர் வழங்கல், வடிகாலமைப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
22. விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக்குழு.
23. அரசியலமைப்பு அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு பற்றிய ஆலோசனைக் குழு.
24. மீள் குடியமர்த்துகை, அனர்த்த நிவாரண சேவைகள் பற்றிய ஆலோசனைக் குழு.
25. திட்டச் செயற்படுத்துகை பற்றிய ஆலோசனைக்குழு.
26. துணைப்பயிர் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
27. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
28. ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழு.
29. மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக்குழு.
30. சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை பற்றிய ஆலோசனைக்குழு.
31. தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு பற்றிய ஆலோசனைக் குழு.
32. மக்கள் தோட்ட முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
33. காணி, காணி அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
34. இளைஞர் அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
35. மக்கள் தொடர்பாடல், தகவல் பற்றிய ஆலோசனைக்குழு.
36. சுதேச மருத்துவத்துறை பற்றிய ஆலோசனைக்குழு.
37. தொழில் உறவுகள், மனிதவலு பற்றிய ஆலோசனைக்குழு.
38. விளையாட்டுத்துறை, பொதுப்பொழுதுபோக்கு பற்றிய ஆலோசனைக்குழு.
39. வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
40. அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
41. நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
42. சுற்றுலாத்துறை பற்றிய ஆலோசனைக்குழு.
43. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை பற்றிய ஆலோசனைக்குழு.
44. வாழ்க்கைத்தொழில், தொழிற்பயிற்சி பற்றிய ஆலோசனைக்குழு.
45. கிராமியக்கைத்தொழில், சுயதொழில் ஊக்குவிப்பு பற்றிய ஆலோசனைக்குழு.
46. உள்ளூராட்சி, மாகாணசபைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
47. கடற்றொழில், நீரகவளமூலங்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
48. கால்நடைவள அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.
49. வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய ஆலோசனைக்குழு.
50. கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் பற்றிய ஆலோசனைக்குழு.
51. உயர்கல்வி பற்றிய ஆலோசனைக்குழு.
52. நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவம் பற்றிய ஆலோசனைக்குழு.

53. கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய ஆலோசனைக்குழு.

54. போக்குவரத்து பற்றிய ஆலோசனைக்குழு.

55. சுற்றாடல், இயற்கைவளங்கள் பற்றிய ஆலோசனைக்குழு.

109 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் பரிசீலனை செய்து அறிக்கையிடும் பொருட்டு ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் ஐந்து (5) பேருக்குக் குறையாததும் முப்பத்தியொரு (31) பேருக்கு விஞ்சாததுமான உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வோர் ஆலோசனைக் குழுவும் கூட்டநடப்பெண்ணாக மூன்று (3) உறுப்பினர் களைக் கொண்டிருக்குமாக.

(ஆ) முறையே “ஏ” நிலையியற்குழு மற்றும் “பீ” நிலையியற்குழு என்றழைக்கப்படும் இரண்டு (சட்டவாக்க) நிலையியற்குழுக்கள் நியமிக்கப்படுமாக.

ஒவ்வொரு குழுவும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு ஏதேனுமொரு குறித்த சட்டமூலமொன்று பரிசீலனைக்கு விடப்படுமிடத்து மேலதிகமாக பதினைந்து (15) உறுப்பினர்களுக்கும் விஞ்சாத எண்ணிக்கையினை ஒவ்வொரு குழுவுக்கும் நியமிப்பதற்கு சபாநாயகர் அதிகாரமுடையவராக இருப்பாராக.

ஒவ்வொரு குழுவும் கூட்ட நடப்பெண்ணாக ஏழு (7) உறுப்பினர்களைக் கொண்டிருக் குமாக.

8.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— ஆலோசனைக்குழு,— இன்றைய தினம் பாராளு மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினால் தடைபெறாமல், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய ஆலோசனைக்குழுவானது ஐந்துக்கு (5) பேருக்கு குறையாததும் முப்பத்திமூன்றுக்கு (33) பேருக்கு விஞ்ஞாததுமான உறுப்பினர்கள் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படுமாக.

9.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— சபைக்குழு,— 122 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சபைக்குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

10.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு,— 123 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

11.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— 124 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது சபாநாயகரைத் தவிசாளராகவும் பிரதிச்சபாநாயகர், குழுக்களின் பிரதித்தவிசாளர், பாராளுமன்றச் சபைமுதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் மேலும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

12.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— அரசாங்க கணக்குகள் பற்றிய குழு,— 125 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்திமூன்று (33) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

13.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பொது முயற்சிகள் பற்றிய குழு,— 126 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பொது முயற்சிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்திமூன்று (33) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

14.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— சிறப்புரிமைகள் பற்றிய குழு,— 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

15.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பொது மனுக்கள் பற்றிய குழு,— 128 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் பொது மனுக்கள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்திமூன்று (33) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

16.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— உயர் பதவிகள் பற்றிய குழு,— 128 (அ) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் உயர் பதவிகள் பற்றிய குழுவானது தெரிவுக்குழுவினால் நியமிக்கப்படும் முப்பத்தியொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

17.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— மனிதரால் ஏற்படுத்தப்படும் பேரழிவுகளை விசாரணை செய்வதற்கும் அவற்றைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்ற தெரிகுழு,— 2006 யூலை மாதம் 20 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட மனிதரால் ஏற்படுத்தப்படும் பேரழிவுகளை விசாரணை செய்வதற்கும் அவற்றைத் தடுப்பதற்கு மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்ற தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை 2008 திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழு விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காலஎல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

18.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— தேர்தல் சீர்திருத்தங்கள் மீதான பாராளுமன்றத் தெரிகுழு,— 2006, ஏப்பிறல் மாதம் 04 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால்

நியமிக்கப்பட்ட தேர்தல் சீர்திருத்தங்கள் மீதான பாராளுமன்றத் தெரிகுழு, தன்னால் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை, 2008 திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009, திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

19.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— வேகமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைப் பற்றி ஆராய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2007 மே மாதம் 08 ஆம் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட வேகமாக அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைப் பற்றி ஆராய்வதற்கான பாராளுமன்ற தெரிகுழு, தன்னால் செயற்படுத்தப்பட்ட விடயங்களை, 2008 திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இயலாதுள்ளதால் குறிப்பிட்ட தெரிகுழுவிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லையினை 96 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2009 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

20.

கௌரவ துலீப் விஜேசேகர,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டு வர அனுமதி வழங்கப்படுமாக :-

“இலங்கை சர்வதேச ஒத்துழைப்புச் சங்கத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 யூன் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.1),— 2009.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம். அங்கீகரிக்கப்படுமாக.

(2009 ஏப்பிறல் 30 ஆந் திகதிய 1599/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிழை திருத்தம் செய்யப்பட்ட 2009 மார்ச்சு மாதம் 30 ஆந் திகதிய 1595/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல.2) ,— 2009.05.26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைகள் தொடர்பிலான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

( 2009 ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதிய 1596/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை(இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2(3) ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 மார்ச்சு மாதம் 30 ஆம் திகதிய 1595/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*5.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 மார்ச்சு மாதம் 30 ஆம் திகதிய 1595/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*6

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 293, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்று ஐம்பது மில்லியன் (ரூபா 450,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப் படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 293 | — | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டுவரும் செலவினம் | ரூ. 450,000,000 |
| | | | ரூ. **450,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, மே மாதம் 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

*7.

முதலீட்டுச் சபை (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*8.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*11.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*12.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*18.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*21.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*22.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*23.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*29.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*30.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

31.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

பிரேமதாச கேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

35.

சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

36.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

37.

கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அறபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

எதிர்கால உலக ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

41.

இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0134 /'09

1.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) லுனுகம்வெஹர பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0135 /'09

2.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சூரியவெவ பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0136 /'09

3.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0137 / '09

4.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளுக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0138 / '09

5.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0139 /'09

6.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வீரகெட்டிய பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0140 /'09

7.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கட்டுவன பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0141 /'09

8.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வலஸ்முல்ல பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0142 / '09

9.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) ஓகெவெல பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0143 / '09

10.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பெலியத்த பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0144 / '09

11.

கௌரவ விஜித ரணவீர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தங்கல்ல பிரதேச செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினர் எவ்வளவு,

(ii) ஒவ்வொரு பதவி மற்றும் பதவிக்குரிய கடமைப் பட்டியல்,

(iii) பதவி வகிப்பவர்களுடைய பெயர் மற்றும் அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட திகதி

ஆகியவற்றை அவர் தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகத்தில் தற்போது வெற்றிடமாகவுள்ள பதவிகள் யாவை, மற்றும் அவ்வாறான வெற்றிடங்கள் எப்போதிருந்து நிலவுகின்றன,

(ii) தற்போது இப் பதவிகளுக்குரிய கடமைகள் எவ்வாறு பேணி வரப்படுகின்றன,

(iii) வெற்றிடமாகவுள்ள பதவிகள் எக்கால கட்டத்தினுள் நிரப்பப்படும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் மேலதிக நேரக் கொடுப்பனவு, தொலைபேசி, மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் ஏனையவற்றுக்கான செலவுகளுக்காக வருடாந்தம் ஏற்கப்பட்ட மொத்தத் தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?